விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, வைகாசி - 19 புதன் 02.06.2021 மலர் - 2, இதழ் - 57

# முழு வீச்சில் அயோத்தி ராமர் கோயில் கட்டுமானப் பணி

'அயோத்தி ராமர் கோயில் கட்டுமானப் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. கோயில் கட்டுமான பணிகள் தலா 12 மணி நேரம் என இரண்டு ஷிப்டுகளில் 24 மணி நேரமும் நடந்து கொண்டிருக்கின்றன. பூமியின் சுமார் 1.2 லட்சம் சதுர மீட்டர் தோண்டப்பட்டுள்ளது. அஸ்திவாரப் பணிகள் அக்டோபருக்குள் நிறைவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ராமர் கோயில் சுமார் இரண்டரை ஏக்கரில் கட்டப்படும், வெள்ளத்தால் ஏற்படும் பாதிப்புகளைத் தடுக்க நிலத்திற்குள் பர்கோட்டா வகை சுவர்கள் கட்டப்படும். இந்த வேலை இருக்கும் மூன்று ஆண்டுகளில் நிறைவடையும். தேவையான அனைத்து முன் தயாரிப்புகளுடன் நாங்கள் வேலைகளை செய்கிறோம். ஸ்ரீராமர் அருளால், தொழிலாளர்கள், பொறியியலாளர்கள் அனைவரும் ஆரோக்கியமாக உள்ளனர். அயோத்தியில் ஸ்ரீராமர் கோயில் கட்டுமானத்திற்கான வீட்டுக்கு வீடு நிதி சேகரிப்பு இயக்கம் நடைபெற்றது. அதில் கோயிலுக்கான தங்கள் பங்களிப்பை அளிக்க முடியாத பக்தர்கள் அதற்கான வலைத்தளத்தின் மூலம் பங்களிப்புகளை இன்னமும் அளிக்க முடியும்' என ஸ்ரீராம ஜென்மபூமி தீர்த்த க்ஷேத்ர அரக்கட்டளையின் பொதுச் செயலாளர் சம்பத் ராய் தெரிவித்தார். முன்னதாக கடந்த மார்ச் 8ம் தேதி செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய விஷ்வ ஹிந்து பரிஷத் (வி.எச்.பி) தேசிய துணைத் தலைவர் ராய், 'அயோத்தியில் ஸ்ரீராமர் கோயில் கட்டுவதற்கான நன்கொடை அளிப்பில் ராஜஸ்தான் அதிக பங்களிப்பு செய்துள்ளது' என்றார்.



# கோயில் நிதியில் கைவைக்கும் தமிழக அரசு

பல கோயில்களில் ஒரு கால பூஜை செய்வதற்குக்கூட நிதியில்லை என்று பராமரிப்பில்லாமல் வைத்துள்ளது தமிழக அரசு. இந்நிலையில், கோயில் சொத்துக்களை வேறு பயன்பாட்டிற்கு உபயோகிக்க கூடாது, ஹிந்து மதம் சார்ந்த பணிகளுக்கு மட்டும்தான் பயன்படுத்த வேண்டும் என்று நீதிமன்றம் பலமுறை அறிவித்துள்ளது. ஆனால், கோயில் நிதியை எடுத்து கொரோனா நோயாளிகளுக்கு தி.மு.க கட்சிக் கொடி மற்றும் சின்னங்களுடன் அன்னதானம் வழங்குகிறது தி.மி.க அரசு. இத்திட்டத்துக்கு கடும் எதிர்ப்பு எழுந்துள்ள நிலையில், தற்போது பழனி தண்டாயுதபாணி கோயில் சார்பில் இரண்டு கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஆக்சிஜன் உற்பத்தி மையம் அமைக்கப்படும் என்று உணவு மற்றும் உணவு வழங்கல் துறை அமைச்சர் சக்கரபாணி கூறியுள்ளார். இது பக்தர்களிடையே பெரும் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது.




ஏற்கனவே, அ.தி.மு.க ஆட்சிக்காலத்தில் பெரிய கோயில்களின் நிதியிலிருந்து கொரோனா நிவாரண பணிகளுக்கு 10 கோடி ரூபாய் வழங்க வேண்டும் என்று அரசு சுற்றறிக்கை அனுப்பியது நினைவிருக்கலாம். இதே போன்று மாற்றுமத வழிபாட்டு தலங்களில் தி.மு.க அரசு அறிவிக்கத் துணியுமா, ஹிந்து கோயில்கள் என்றால் இளக்காரமா என ஹிந்துக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

# குப்பை வண்டியில் காய்கறி விநியோகம்




கொரோனா தொற்று மதுரையில் அதிகமாக பரவி வரும் நிலையில், ஆக்சிஜன் படுக்கை மற்றும் போதிய தடுப்பூசி வழங்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சியரிடம், அ.தி.மு.க எம்எல்ஏக்கள் செல்லூர் கே.ராஜூ, ஆர். பி உதயகுமார், வி.வி.ராஜன் செல்லப்பா, பெரியபுள்ளான், ஐயப்பன் ஆகியோர் மனு அளித்தனர். பின்னர் செல்லூ ராஜு செய்தியாளர்களிடம் பேசுகையில், 'மத்திய அரசுடன் இணக்கமாக இருந்து தமிழக அரசு கொரோனா தடுப்பூசிகளை கேட்டுப்பெற வேண்டும். விலைவாசி மிகக் கடுமையாக உயர்ந்து வருகிறது. மாநகராட்சி குப்பை வண்டிகளை தூய்மைப்படுத்தி, அதன் மூலம் காய்கறிகள் விற்பனை செய்யப்படுகிறது. இதனால், குப்பை வண்டிகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு, குப்பைகள் தேங்கிக் கிடக்கின்றன. குப்பை வண்டிகளில் காய்கறிகளை ஏற்றிச் சென்று விற்பனை செய்யப்படுவதால், மக்களும் அதிருப்தி அடைந்துள்ளனர். கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு, கவுன்சிலிங் வழங்க வேண்டும். சத்து மாத்திரைகளை அனைத்து இடங்களிலும் வழங்க வேண்டும்' எனக் கூறினார்.

# கோயில் மண்டபங்கள் மீட்பு



ஸ்ரீரங்கம் ரங்கநாதசுவாமி கோயில் ராஜகோபுரத்திற்கு முன்பு உள்ள நான்கு கால் மண்டபங்களை சிலர் ஆக்கிரமித்து கடைகள் நடத்தி வந்தனர். கடந்த 2018ம் ஆண்டு மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் வசந்தராயர் மண்டபத்தில் இயங்கிவந்த கடைகளில் மின்கசிவால் தீ விபத்து ஏற்பட்டு பெரும் சேதம் ஏற்பட்டது. இதையடுத்து கோயில்களில் உள்ள மண்டபங்களை வியாபார நோக்கத்திற்காக பயன்படுத்த அனுமதிப்பதில்லை என்று அறநிலையத்துறை அறிவித்தது. இதன் அடிப்படையில் கோயில்களுக்கு உள்ளும் வெளியிலும் மண்டபங்களில் செயல்பட்டு வந்த கடைகள் அகற்றப்பட்டன. ஸ்ரீரங்கம் ரங்கநாத சுவாமி கோயில் மண்டபத்தை ஆக்கிரமித்து கடை நடத்தியவர்கள் அதனை காலி செய்யுமாறு நோட்டீஸ் வழங்கப்பட்டது. அவர்கள் இதை எதிர்த்து நீதிமன்றத்தை நாடினர். வழக்கை விசாரித்த நீதிமன்றம், பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட இந்த மண்டபங்கள் வியாபார நோக்கத்திற்காக கட்டப்படவில்லை என்பதை சுட்டிக்காட்டி, கடைகளை காலி செய்ய சொன்னது சரியே என்றும், மே 30க்குள் காலி செய்ய வேண்டும் என்று தீர்ப்பளித்தது. இதனையடுத்து, மண்டபங்களை ஆக்கிரமித்து எழுப்பப்பட்ட கட்டுமானங்களை அகற்றும் நடவடிக்கையில் அறநிலையத்துறை ஈடுபட்டது. இது பக்தர்களிடம் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# ஆன்லைன் வகுப்பு பிரதமரிடம் புகாரளித்த சிறுமி




கொரோனா தொற்றால் பள்ளி, கல்லூரிகள் மூடியதால், குழந்தைகள் மாணவர்களுக்கு ஆன்லைன் வாயிலாக பாடங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அப்படி நடத்தப்படும் வகுப்பு ஆறு மணி நேரம் நீடிப்பதாகவும் அதனால் விரக்தி அடைந்துள்ளதாகவும் காஷ்மீரை சேர்ந்த ஆறு வயது சிறுமி, பிரதமர் மோடியிடம் புகாரளிக்கும் வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது. 1 நிமிடம் ஓடக்கூடிய அந்த வீடியோவில், 'எனது ஆன்லைன் வகுப்புகள் காலை 10 மணிக்கு துவங்கி ஆங்கிலம், கணிதம், உருது, சுற்றுச்சூழல் கல்வி, கணினி வகுப்பு என மதியம் 2 மணி வரை நீள்கிறது. குழந்தைகளுக்கு நிறைய வேலை இருக்கிறது. சிறிய குழந்தைகள் ஏன் இவ்வளவு வேலைகளை சமாளிக்க வேண்டும்? என்ன செய்ய முடியும் மோடி சாஹிப்?' என்று மழலை மொழியில் கேட்டுள்ளார் இந்த சிறுமி.

# கொரோனா தடுப்பூசி அன்றே சான்றிதழ்



மத்திய மாநில அரசுகள் எடுத்த நடவடிக்கைகள் காரணமாக கொரோனா தொற்று குறைந்து வருவதுடன் தடுப்பூசி போடுபவர்கள் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது. இதனால் தடுப்பூசி உற்பத்தி அதிகரிப்பு, கோவின் செயலியை மேம்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதன்படி, தடுப்பூசி செலுத்தி கொள்வதற்கான நாள் அல்லது நேரத்தை மாற்றியமைக்க, தேர்ந்தெடுக்க கோவின் செயலியில் தற்போது வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும்,தடுப்பூசி கொண்ட பயனாளர்களுக்கு அன்றைய தினமே சான்றிதழ் வழங்க வேண்டும் என மத்திய அரசு அறிவுறுத்தி உள்ளது.

# அலைக்கழிக்கப்படும் மக்கள்



**கொ**ரோனாவால் உயிரிழப்பவர்கள் பற்றிய தகவலை அரசு மருத்துவமனை நிர்வாகம், மாநகராட்சியின் பெயரிலுள்ள இணையதளத்தில் பதிவேற்றம் செய்யும். பிறகு மாநகராட்சி அதிகாரிகள் அந்த ஆவணங்களை சரிபார்த்து கையெழுத்திட்டு இறப்பு சான்றிதழை இணைய தளத்தில் பதிவேற்றம் செய்வார்கள். இந்த இறப்பு சான்றிதழை மரணமடைந்தவர்களின் உறவினர்கள் டவுன்லோட் செய்து கொள்வார்கள். ஆனால் சென்னை, வேலூர், மதுரை உள்ளிட்ட பல அரசு மருத்துவமனைகளில் உயிரிழந்த கொரோனா நோயாளிகள் பற்றிய ஆவணங்கள் சம்பந்தப்பட்ட மாநகராட்சி இணைய தளங்களில் ஒரு மாதத்திற்கும் மேலாக முறைப்படி பதிவேற்றம் செய்யப்படாமல் உள்ளது. இதனால் இறந்தவர்களின் உறவினர்கள் இறப்பு சான்றிதழை பெற முடியாத அவல நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இறந்தவர்களின் வாரிசுகள், சொத்து பாகப்பிரிவினை, வங்கி முதலீடு, இன்சூரன்ஸ் பணம் போன்றவற்றுக்கு இறப்புச் சான்றிதழ் இல்லாமல் எதுவும் செய்ய இயலாது என்ற நிலையில், தேவையற்ற இந்த தாமதம் இறந்தவர்களின் உறவினர்களை அலைகழித்து மேலும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

# கோவிட் தடுப்பூசிக்கு லஞ்சம்

**செ**ன்னை, மாதவரத்தில் 23வது வார்டில் மாநகராட்சியின் நகர்ப்புற சமுதாய நல மருத்துவமனை இயங்குகிறது. இங்கு, கடந்த இருதினங்களாக தடுப்பூசி இருப்பு இல்லை என பலரை திருப்பி அனுப்பி உள்ளனர். புழல் அடுத்த கல்பாளையம் பகுதியை சேர்ந்த நந்தகோபாலுக்கும் அவர் மனைவிக்கும் இதே பதிலை கூறியுள்ளனர். அவர்கள் வெளியே வந்தபோது, அங்குள்ள காவலாளி தினகரன், அவர்களிடம், 'கோவிட்ஷீல்டுக்கு, 500 ரூபாய், கோவாக்சினுக்கு, 800 ரூபாய் கொடுத்தால் தடுப்பூசி கிடைக்கும்' என, ரகசியமாக கூறியுள்ளார். இதையடுத்து, 300 ரூபாயை ரொக்கமாகவும், 200 ரூபாயை, 'கூகுள் பே' மூலமும் நந்தகோபால் கொடுத்துள்ளார். மற்றொரு ஊழியர் பிரசாத் கொடுத்த துண்டு சீட்டு மூலம் அங்குள்ள மருத்துவர் நந்தகோபாலுக்கு 'கோவிட்ஷீல்டு' தடுப்பூசி செலுத்தியுள்ளார். பிறகு, அங்கு நடந்த பேச்சுவார்த்தை, கூகுள் பே மூலம் பணம் கொடுத்தது உள்ளிட்ட ஆதாரங்களுடன் புழல் காவல்துறையில் புகார் செய்தார் நந்தகோபால். இதனையடுத்து, இருவரையும் காவல்துறையினர் கைது செய்தனர்.





# ஆக்ஸிஜன் சிலிண்டருடன் கூடிய ஸ்ட்ரெச்சர்

கொரோனா பாதிப்புடன் சுவாச சிக்கலும் உள்ள நோயாளிகள் அனைவருக்கும் மருத்துவமனைகளில் உடனே படுக்கைகள் கிடைப்பதில்லை. இதற்காக சில தொண்டு அமைப்புகள், தனியார் நிறுவனங்கள் ஆக்சிஜன் வசதிகளுடன் கூடிய பேருந்துகளை இலவசமாக நடத்துகின்றனர். எனினும் நோயாளிகளை படுக்கைகளுக்கு விரைவில் இடம் மாற்றுவது அவசியம். இதற்கு தீர்வு தரும் விதமாக, 'ஆக்ஸிஜன் ஸ்ட்ரெச்சர்'களை மதுரை பாண்டியன் சரஸ்வதி யாதவ் பொறியியல் கல்லூரி மாணவர்கள் உருவாக்கி உள்ளனர். மெக்கானிக்கல் துறை உதவி பேராசிரியர் பொன்வேல் முருகன் வழிகாட்டுதலுடன் மோகன், வெற்றி மணிகண்டன், தனபிரகாஷ், போஸ் ஆகிய 4 மாணவர்கள் இணைந்து ரூ. 55,000 செலவில் 3 நாட்களில் இந்த ஸ்ட்ரெச்சர்களை உருவாக்கி உள்ளனர். இந்த ஸ்ட்ரெச்சர்களில் தொழிற்சாலைகளுக்கு பயன்படுத்தப்படும் பெரிய வகை ஆக்சிஜன் சிலிண்டர்களை படுக்கைக்கு கீழேயே வைத்துக்கொள்ள முடியும். இதனால், நோயாளிகளுக்கு படுக்கை வசதியுடன் கூடுதல் நேரம் ஆக்சிஜன் தடையின்றி கொடுக்க முடியும். இந்த ஸ்ட்ரெச்சர்கள் உடன் சேர்த்து சுமார் 50 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான பிபிஇ கிட், முகக்கவசங்கள், கையுறைகளையும் சேர்த்து மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அர்ப்பணித்து உள்ளனர்.





# மலைகள் காடுகளை பாதுகாக்க வேண்டும்

விருதுநகர் மாவட்டம், ராஜபாளையத்தைச் சேர்ந்த சகோதரர்கள் சந்தானம், சபரிமலை ஆகியோர் உயர் நீதிமன்ற மதுரை கிளையில் தாக்கல் செய்த மனுவில் 'ராஜபாளையம், திருப்பணிமலையில் உள்ள கல் குவாரியில் கற்களை வெட்டியெடுக்க வெடிமருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன. இதனால் ஊர், ஊர் மக்கள், நீர்நிலை, பாதைகள் என அனைத்து வகையிலும் பாதிப்பு ஏற்படுகிறது. எனவே குவாரி செயல்பட தடை விதிக்க வேண்டும்' எனக் கோரியிருந்தனர். இந்த மனுவை நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் விசாரித்து, 'மலைகள், மலைக்குன்றுகள், காடுகள், ஆறுகள் ஆகியன இயற்கையின் கொடை. இவற்றை எதிர்கால சந்ததியினருக்காக பாதுகாக்க வேண்டும். சுனாமியின்போது மாங்குரோவ் காடுகள் இயற்கை அரணாக இருந்தன. அதேபோல் மலைகள்தான் கிராமங்களின் பாதுகாப்பு அரண். எனவே, மலைகளை அழிக்க உரிமம் வழங்குவதை நிறுத்த வேண்டும். தற்போது வெடி வைத்து மலையில் பாதியளவு தகர்க்கப்பட்டுவிட்டது. மேலும் தொடர்ந்தால் மலை முழுமையாக அழிக்கப்படும். எனவே, அங்கு குவாரி உரிமம் ரத்து செய்யப்படுகிறது' என உத்தரவு பிறப்பித்தார்.

# உச்ச நீதிமன்ற தமிழக அரசு வழக்கறிஞர்கள்



தமிழக தேர்தலில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதால், உச்சநீதிமன்றத்துக்கு ஏற்கனவே இருந்த தமிழக அரசு தரப்பு வழக்கறிஞர்கள் ராஜினாமா செய்துள்ளனர். அவர்களுக்கு மாற்றாக ஏற்கெனவே உச்ச நீதிமன்றத்தில் வழக்கறிஞர்களாக உள்ளவர்களும் தி.மு.கவின் பல வழக்குகள் ஆஜராகியுள்ளவர்களுமான அரிஸ்டாட்டில், குமணன் ஆகியோர் அந்த பதவிக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளனர். ஒருவர் குற்றம் சார்ந்த வழக்குகளையும், மற்றொருவர் சிவில் வழக்குகளையும் பார்த்துக்கொள்வார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது. உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசின் வழக்கறிஞர்களாக ஏற்கெனவே இருந்தவர்களான எம்.யோகேஷ் கன்னா, டி.ஆர். பி. சிவக்குமார், பி.விநோத் கன்னா ஆகியோரின் ராஜினாமா ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

# ஆனந்தய்யா மருந்துக்கு ஆந்திர அரசு ஒப்புதல்



ஆந்திராவின் நெல்லூர் மாவட்டத்தில் உள்ள கிருஷ்ணபட்டணத்தை சேர்ந்த ஆனந்தய்யா என்ற பாரம்பரிய ஆயுர்வேத மருத்துவர், கொரோனாவுக்கு மருந்து தயாரித்து நோயாளிகளுக்கு இலவசமாக வழங்கி வந்தார். இதனை பெற, தினமும் ஆயிரக்கணக்கானோர் அங்கு குவிந்தனர். இதனால், மருந்து விநியோகத்தை நிறுத்திய மாவட்ட கலெக்டர், மருந்தை சோதனைக்காக அனுப்பி வைத்தார். இந்த மருந்தை ஆயுஷ் அமைச்சகம் மற்றும் திருப்பதி தேவஸ்தான ஆயுர்வேத நிபுணர்கள் ஆய்வு நடத்தினர். இதில் பக்க விளைவு ஏதும் இல்லை என நிரூபணம் ஆனது. இது குறித்த ஆந்திர உயர் நீதிமன்ற வழக்கில், ஆனந்தையாவின் மருந்திற்கு தனிப்பட்ட மருத்துவ குணங்கள் உள்ளதால், அதனை எற்பதுடன், பொதுமக்களுக்கு வழங்க அனுமதி அளிப்பதாக ஆந்திர அரசு தெரிவித்தது. மத்திய ஆயுர்வேத மருத்துவ கவுன்சில் அறிக்கை அடிப்படையில், இந்த முடிவு எடுக்கப்பட்டு உள்ளதாக தெரிவிக்கப்பட்டு உள்ளது. மேலும், 'பி, எல்' மற்றும் 'எப்' என பெயரிடப்பட்ட மூன்று பாரம்பரிய மருந்துகளுக்கு, அனுமதி அளிக்க முடிவு செய்யப்பட்டது. அதே சமயம், கண்ணில் விடப்படும் சொட்டு மருந்துக்கு தடை விதிக்கப்பட்டு உள்ளது.

# வேலூர் இப்ராஹிமுக்கு தலைவர்கள் வாழ்த்து



தமிழகத்தில் தற்போது நடந்து முடிந்த சட்டமன்ற தேர்தலில் பா.ஜ.கவின் சிறுபான்மையினரின் சார்பாக கட்சிப்பணி, அரசியல் பிரச்சாரம் ஆகியவற்றில் முழுமையாக ஈடுபட்டவர் வேலூர் இப்ராஹிம். அவர் தற்போது பா.ஜ.க. வின் அகில இந்திய மைனாரிட்டி மோர்ச்சாவின் செயலாளராக அதிகாரபூர்வமாக நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கு, பா.ஜ.க மாநில தலைவர் முருகன், துணைத் தலைவர் அண்ணாமலை ஐ.பி.எஸ், அகில இந்திய மகளிர் அணியின் தலைவர் வானதி சீனிவாசன் உட்பட பல தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

# பிரதமர் மோடிக்கு மக்கள் ஆதரவு



மத்தியில் மோடி ஆட்சி 7 ஆண்டுகள் முடிவடைந்ததை அடுத்து இது தொடர்பாக ஏ.பி.பி தொலைக்காட்சி, சிவோட்டர் இணைந்து கருத்து கணிப்பு நடத்தியது. அதில், 'நரேந்திர மோடி அல்லாது ராகுல் காந்தி பிரதமராக இருந்திருந்தால் கொரோனா பிரச்சனையை யார் சிறப்பாக கையாண்டிருப்பார்கள்' என்று கேள்வி கேட்கப்பட்டது. அதற்கு 66 சதவீதம் பேர் நகரங்களிலும், 62 சதவீதம் பேர் கிராமங்களிலும் மோடி சிறப்பாக கையாண்டார் என்று தெரிவித்துள்ளனர். அதாவது சராசரியாக 63 சதவீதம் பேர் நரேந்திர மோடி, கொரோனா பிரச்னையை சிறப்பாக கையாண்டார் என்று கருத்து தெரிவித்துள்ளனர். இதற்காக, கடந்த ஜனவரி முதல் மே மாதம் வரை நாடு முழுவதும் உள்ள பல்வேறு மக்களிடம் கருத்துக்களை கேட்டது. இப்பொழுது அது குறித்த புள்ளி விவரங்களை வெளியிட்டுள்ளது. இதைத்தவிர, கொரோனா வைரஸ் பரவிய காலத்தில் நடத்தப்பட்ட ஐந்து மாநில சட்டப்பேரவை தேர்தல் சரியா, தவறா? கொரோனா வைரஸ் பரவியபோது மோடி, ஐந்து மாநில சட்டப்பேரவை தேர்தலுக்காக பிரச்சாரம் செய்தது சரியாய், தவறா? எனவும் பல கேள்விகள் முன் வைக்கப்பட்டன.

# பாஸ்டேக் பத்திரம்

தேசிய நெடுஞ்சாலைகளில் பயணிக்கும்போது சுங்கச்சாவடிகளில் கட்டணம் செலுத்த மின்னணு முறையில் கட்டணம்வசூலிக்கும், 'பாஸ்டேக்' திட்டம் செயல்படுத்தப்படுகிறது. பாஸ்டேக் மின்னணு அட்டைகளை தேசிய நெடுஞ்சாலை ஆணையம் www.ihmcl.co.in என்ற இணையதளம் வாயிலாகவும், 'my Fastag' என்ற அலைபேசி செயலி வாயிலாகவும் வழங்கி வருகிறது. இதனை எளிமைபடுத்த பல்வேறு வங்கிகள், தொலைதொடர்பு நிறுவனங்கள், பண வங்கிகள் வாயிலாகவும் பாஸ்டேக் அட்டைகள் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், தற்போது 'ஆன்லைன்' வாயிலாக, பாஸ்டேக் அட்டைகள் வழங்கப்படுவதாக, பல போலி விளம்பரங்கள் வருகின்றன. இதை நம்பி ஆன்லைன் வாயிலாக, யாரும் பணம் கட்டி ஏமாற வேண்டாம் என தேசிய நெடுஞ்சாலை ஆணையம் எச்சரித்துள்ளது. இது போன்ற முறைகேடுகள் நடப்பதாகத் தெரிந்தால் அந்த விபரங்களை '1033' என்ற, அவசர கட்டுப்பாட்டு அறைக்கு அல்லது etc.nodal@ihmcl.com. என்ற மின்னஞ்சல் முகவரியில் தெரிவிக்க கோரப்பட்டுள்ளது.



# ஆந்திர அரசின் தேசதுரோக வழக்கு

ஆந்திராவில் ஒய்.எஸ்.ஆர்., காங்கிரஸ் கட்சியை சேர்ந்த எம்.பி., கிருஷ்ணம் ராஜூ, சமீப காலத்தில் முதல்வர் ஜெகன் மோகனுக்கு எதிராக கலகக் குரல் எழுப்பி வருகிறார். முதல்வர் ஜெகன் மோகன் மீது வருமானத்துக்கு அதிகமாக சொத்து குவித்த வழக்கு நிலுவையில் உள்ளது. இவ்வழக்கில் ஜாமீனில் உள்ள ஜெகன் மோகன் ரெட்டி நிபந்தனைகளை மீறி செயல்படுகிறார். அவரது ஜாமினை ரத்து செய்ய வேண்டும் என்று கிருஷ்ணம் ராஜூ கூறி வந்தார். இதனால் கிருஷ்ணம் ராஜூவை கைது செய்தது ஆந்திர காவல்துறை. அவர் மீது அரசுக்கு எதிராக சதி, கலகத்தை தூண்டுதல், இரு பிரிவினிரிடையே மோதலை ஏற்படுத்தும் வகையில் பேசுதல், தேசதுரோக வழக்கு என பல வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவரது பேச்சை வெளியிட்ட இரு செய்தி சேனல்களுக்கு எதிராகவும் இதே பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்ற நீதிபதிகள், 'இரண்டு செய்தி நிறுவனங்கள், அவற்றின் ஊழியர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கக் கூடாது. பத்திரிகை, செய்தி தொலைக்காட்சிகளுக்கு சுதந்திரமான கருத்துரிமை உள்ளது. அவற்றிற்கு எதிராக, தேசதுரோக வழக்கு எதற்காக தொடுக்கப்படுகிறது என்பதற்கான விளக்கத்தை நான்கு வாரத்தில் ஆந்திர அரசு தெரிவிக்க வேண்டும்' என, உத்தரவிட்டுள்ளனர்.




# மூன்று மாத பி.எப். பணம் எடுக்கலாம்


கொரோனா இரண்டாவது அலையை முன்னிட்டு, ஊழியர்கள், தங்கள் வருங்கால வைப்பு நிதி எனப்படும் பி.எப் கணக்கில் இருந்து இரண்டாவது முறையாக 3 மாத முன்பணம் எடுத்துக் கொள்ள தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி கழகம் (இ.பி.எப்.ஓ) அனுமதித்துள்ளது. கடந்த ஆண்டு கொரோனா முதல் அலையின்போது முழு ஊரடங்கு விதிக்கப்பட்டபோது எழுந்த நிதி சிக்கலை சமாளிக்க பி.எப் கணக்கிலிருந்து முன்பணம் எடுத்துக் கொள்ள சிறப்பு அனுமதி வழங்கப்பட்டது. அதேபோல, தற்போதும் 2வது முறையாக பி.எப் கணக்கில் இருந்து முன்பணம் எடுத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. 3 மாத அடிப்படை சம்பளம் அல்லது பி.எப் கணக்கில் உள்ள நிலுவைத் தொகையில் 75 சதவீதம் இதில் எது குறைவோ அதை முன்பணமாக ஊழியர்கள் எடுத்துக் கொள்ளலாம். குறைவான தொகைக்கும் விண்ணப்பிக்க முடியும். கடந்த ஆண்டு, 76.31 லட்சம் கொரோனா கால முன்பண கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, உறுப்பினர்களுக்கு ரூ.18,698.15 கோடி விநியோகிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# புதிய வகை கொரோனாவுக்கு பெயர் சூட்டல்

பல்வேறு நாடுகளிலும் கண்டறியப்பட்ட உருமாறிய கொரோனா வகைகளை எளிதாக அடையாளம் காணும் பொருட்டு, அவற்றிற்கு பெயர்களை சூட்டியுள்ளது உலக சுகாதார அமைப்பு. அவ்வகையில், 2020 செப்டம்பரில் கண்டறியப்பட்ட கொரோனா வகையை 'ஆல்பா' என்றும், கடந்த ஆண்டு அக்டோபரில் பாரதத்தில் முதலில் கண்டறியப்பட்ட B.1.617 வகை கொரோனாவை 'டெல்டா' எனவும், தென் ஆப்பிரிக்காவில் 2020 மே மாதம் கண்டறியப்பட்ட கொரோனாவை 'பீட்டா' என்றும், பிரேசிலில் 2020 நவம்பரில் கண்டறியப்பட்ட வகை 'காமா' எனவும், அமெரிக்காவில் கண்டறியப்பட்ட கொரோனா வகையை 'எப்ஸிலான்' எனவும் பெயரிட்டுள்ளது.



# ஹேமந்த் சோரன் அடித்த - யூடர்ன்



ஜார்க்கண்டில் காங்கிரஸ் துணையுடன் ஆட்சியை நடத்தும் முதல்வர் ஹேமந்த் சோரன், ஒரு மாதத்திற்கு முன்பு 1845 வயதுக்குட்பட்ட அனைத்து பயனாளிகளுக்கும் இலவச தடுப்பூசிகள் போடப்படும் என அறிவித்தார். பிறகு அது அரசுக்கு 1,100 கோடி ரூபாய் கூடுதல் நிதி சுமையை ஏற்படுத்தும் என்று கூறி பின்வாங்கியதுடன் மத்திய அரசை அதற்கான தடுப்பூசிகளை இலவசமாக வழங்க கோரிக்கை விடுத்துள்ளார். முன்னதாக டெல்லி முதல்வர் அர்விந்த் கேஜ்ரிவால், தடுப்பூசி பரவலாக்கலை ஆதரித்து பேசி மாநிலங்களே தடுப்பூசி வாங்கிக்கொள்ளும், அதற்கு மத்திய அரசு அனுமதிக்க வேண்டும் என வீராப்பாக பேசிவிட்டு, பிறகு, தடுப்பூசி கொள்முதலை மத்திய அரசே மேற்கொள்ள வேண்டும். மத்திய அரசுதான் மாநிலங்களுக்குத் தர வேண்டும் என பல்டி அடித்தார். தற்போது அந்த வழியை ஹேமந்த் சோரனும் பின்பற்றுகிறார். முன்னதாக, மத்திய சுகாதார அமைச்சகத்திடம் கிடைத்த தரவுகளின்படி ஜார்க்கண்ட் 37.3% தடுப்பூசிகளை வீணடித்தது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டியதும் அவசியம்.

# சிவசேனா எம்.எல்.ஏவுக்கு சிறை



மத்திய மகாராஷ்டிராவின் ஔரங்காபாத் நகரில் கடந்த 2018 மே 11 அன்று அசாசுதீன் ஒவைசியின் ஏ.ஐ.எம்.ஐ.எம் கட்சியினருக்கும் சிவசேனையை சேர்ந்தவர்களுக்கும் இடையே நடைபெற்ற மோதலில் இரண்டு பேர் இறந்தனர். 12 காவல்துறையினர் உட்பட சுமார் ஐம்பது பேர் காயமடைந்தனர். 100 க்கும் மேற்பட்ட கடைகள், 80 வாகனங்கள் கலவரக்காரர்களால் எரிக்கப்பட்டன. இவ்வழக்கில் கைது செய்யப்பட்டு கிராந்தி காவல் நிலையத்தில் வைக்கப்பட்டிருந்த இரண்டு பேரை விடுவிக்கும் நோக்கில் சிவசேனா சட்டமன்ற உறுப்பினர் பிரதீப் ஜெய்ஸ்வால் அங்கு சென்று காவல் நிலையத்தை அடித்து உடைத்ததுடன் பணியில் இருந்த காவலர்களை தாக்கியுள்ளார். இது சம்பந்தமாக நடைபெற்ற வழக்கில், நீதிமன்றம் ஜெய்ஸ்வாலுக்கு ஆறு மாத சிறைத்தண்டனையும், ரூ. 2,500 அபராதமும் விதித்துள்ளது.

# காற்றில் பறந்த கொரோனா விதிமுறை

ராஜஸ்தானின் ஜெய்ப்பூரில் ஹாஜி ரபாத் அலி என்பவரின் இறுதி ஊர்வலத்தில் 15,000 க்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் கலந்துகொண்டனர். அதில் சில மூத்த காவல்துறை அதிகாரிகளும் அடக்கம். ராஜஸ்தானில் கொரோனா தினசரி அதிகரித்து வருகிறது அதனால், ஜூன் 8 வரை முழு ஊரடங்கு அமலில் உள்ளது எனும் சூழலில் அனைத்து கோவிட் 19 விதிமுறைகளையும் மீறி, இந்த ஊர்வலம் நடத்தப்பட்டுள்ளது. இது குறித்த வீடியோக்கள் சமூக வலைத்தளத்தில் வெளியானதை அடுத்து ராஜஸ்தான் சட்டமன்ற உருப்பினர் ரபீக் கான் உட்பட 11 பேர் மீது மட்டும், தொற்றுநோய் சட்டத்தின் கீழ் காவல்துறையினர் வழக்கு பதிவு செய்துள்ளனர்.



# சுப்ரமணிய சாமியின் அதிரடி

பாரதிய ஜனதா கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும், டெல்லி மேல்சபை எம்பியுமான சுப்பிரமணிய சாமி அதிரடி அரசியலுக்கு பெயர் பெற்றவர். யாரைப் பற்றியும், எது குறித்தும் கவலைப்படாமல் விமர்சனங்களையும் முன் வைப்பவர். அது சிலநேரம் பா.ஜ.க தலைவர்களுக்கு, இன்னும் சொலப்போனால், மத்திய அரசின் கொள்கை முடிவுகளுக்குகூட எதிராக இருக்கும். தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில், தி.மு.க வெற்றிபெற்றதைத் தொடர்ந்து அவருடைய பார்வை தமிழகத்தை நோக்கி திரும்பியுள்ளது.

**கவர்னருக்குக் கடிதம்:**

தமிழக கவர்னர் பன்வாரிலால் புரோஹித்துக்கு சுப்ரமணிய சாமி ஒரு அவசர கடிதம் எழுதினார். அதில், 'திமுக, அரசின் ஆதரவு காரணமாக, தமிழகத்தில், தற்போதுள்ள பதற்றமான சூழ்நிலையை, உங்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். பிராமணர்களை குறி வைப்பதும், அவர்கள் மீது வார்த்தை தீவிரவாத தாக்குதல் நடத்துவதும், ஜெர்மனியின் அடால்ப் ஹிட்லர் தலைமையிலான நாஜி அரசின், துவக்க கால நிகழ்வை ஒத்திருக்கிறது. இது குறித்து, நீங்கள் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும். இதற்கு, திராவிடர் கழகம், தி.மு.கவில் உள்ள சிலர் மற்றும் விடுதலைபுலி ஆதரவாளர்கள் காரணம். புதிய அரசு பொறுப்பேற்ற ஆரம்ப நிலையில் இச்சூழல் ஏற்பட்டுள்ளது. அதனால் சட்டப்பிரிவு, 356ஐ பயன்படுத்தக் கூற இயலவில்லை; இதை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும். தலைமை செயலாளரை அழைத்து அறிக்கை கேட்க வேண்டும். நடவடிக்கை எடுக்கவேண்டும்' என்று கூறி இருந்தார்.

**பத்மா சேஷாத்ரி பள்ளி:**

அடுத்ததாக, சென்னை கேகே நகர் பத்மா சேஷாத்ரி பள்ளியில், மாணவிகளுக்கு ஆசிரியர் ராஜகோபாலன் பாலியல் தொல்லை கொடுத்த விவகாரம் வெளிவந்தது. அந்த ஆசிரியர் கைது செய்யப்பட்டார். அப்போது பள்ளியை அரசாங்கமே ஏற்று நடத்தவேண்டும் என்ற கோரிக்கையை சில அமைப்புகள் விடுத்தன. இதை ஜாதிய பிரச்சினையாக மாற்றும் முயற்சிகளும் நடந்தன. இதனால் கொதித்தெழுந்த சுப்பிரமணியசாமி பத்மா சேஷாத்ரி பள்ளி விவகாரத்தில், தமிழக அரசு உள்நோக்கத்தோடு செயல்படுவதாகத் தெரிய வந்தால், தமிழக அரசு கலைக்கப்படும் என்று கூறி பரபரப்பை ஏற்படுத்தினார். பொதுவாக இதுபோன்ற மிரட்டலை வேறு யாராவது விடுத்திருந்தால் அவருக்கு எதிராக கண்டன கணைகள் சரமாரியாக பாய்ந்து இருக்கும். ஆனால் அது குறித்து இதுவரை தி.மு.கவோ அதன் கூட்டணி கட்சிகளோ வாய் திறக்கவில்லை. சில ஊடகங்கள் மட்டும்தான் கருத்து தெரிவித்தன.

**ஜகத் காஸ்பர் எப்.பி.ஐ குற்றவாளி:**

அந்த சூடு ஆறுவதற்குள், மற்றொரு பரபரப்பை தற்போது ஏற்படுத்தி இருக்கிறார் சுப்ரமணிய சாமி. அது, தி.மு.க மகளிரணி செயலாளரும் எம்.பியுமான கனிமொழி பற்றியது என்பதால் தமிழக அரசியல் வட்டாரத்தில் அதிர்வலை ஏற்பட்டுள்ளது. சுப்பிரமணியசாமி தனது டுவிட்டர் பதிவில், 'பாதிரியார் கஸ்பார் ராஜ் இலங்கையில் செயல்பட்ட விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் தொடர்புடைய பயங்கரவாதி. 2009ம் ஆண்டுக்கு முன்பு அமெரிக்காவில் 2 வருடங்கள் தங்கி இருந்த அவர், விடுதலைப்புலிகள் இயக்கத்துக்காக ஆயுதங்களை கடத்தினார். அமெரிக்காவின் புலனாய்வு விசாரணை முகமையான எப்.பி.ஐயால் அவருக்கு வாரண்ட் பிறப்பிக்கப்பட்டது. ஆனால் அவர் அமெரிக்காவிலிருந்து தப்பினார். தற்போது அவர் தமிழகத்தில் கனிமொழியின் ரகசிய பாதுகாப்பில் இருக்கிறார். தூத்துக்குடியில் அவரை அடிக்கடி பார்க்க முடிகிறது' என்று குற்றம்சாட்டி இருக்கிறார். இதற்கு ஆதாரமாக, 2013ம் ஆண்டு அன்றைய தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு, ஜகத் கஸ்பார் குறித்தும் அவர் பின்னணி குறித்தும் விளக்கி சுப்பிரமணியசாமி எழுதிய கடிதம், நியூயார்க் நகரின் கிழக்கு மாவட்ட கோர்ட்டு, கஸ்பார் ராஜ் மரிய பாவ்லின் என்கிற பாதிரியார் கஸ்பார் ராஜ் உள்ளிட்ட 7 பேர் மீது நடவடிக்கை எடுக்கும்படி எப்.பி.ஐக்கு உத்தரவிட்ட நோட்டீசின் நகல் இணைக்கப்பட்டுள்ளது.

**என்ன சொல்ல வருகிறார்?**

அமெரிக்க நீதிமன்ற நோட்டீசையும் வெளியிட்டு இருப்பதன் மூலம், இதை காரணமாக வைத்தே என்னால் தி.மு.க ஆட்சியை கலைக்க முடியும் அல்லது கனிமொழியை சிறையில் அடைக்க முடியும், ஒருவேளை ஜெகத் காஸ்பர் கைது செய்யப்பட்டு வாய் திறந்தால் என்னென்ன நடக்கும், யாரெல்லாம் மாட்டுவார்கள் என்று சுப்ரமணிய சாமி சவால் விடுவதுபோல் தெரிகிறது. ஏனெனில், 1991ல் கருணாநிதி தலைமையிலான தி.மு.க அரசை, விடுதலைப்புலிகளை காரணம்காட்டி கலைத்ததில் முக்கிய பங்காற்றியவர் இதே சுப்பிரமணியசாமிதான்.




# வாக்கு வங்கிக்காக தீர்மானம் நிறைவேற்றம்

லட்சத்தீவின் நிர்வாகியான பிரபுல் படேலை திரும்ப அழைப்பதற்கான தீர்மானத்தை கேரள சட்டமன்றம் கடந்த திங்களன்று ஒருமனதாக நிறைவேற்றியது. இந்த பிரச்சினையில் மத்திய அரசின் தலையீட்டையும் கோரியது. கேரளாவின் ஆளும் கட்சியான சி.பி.எம் தொடர்ந்து முஸ்லிம்களை திருப்திப்படுத்த முயற்சித்து வருகிறது. அதற்காகவே, சி.ஏ.ஏ, என்.ஆர்.சி சட்டங்களை தேவையே இன்றி கடுமையாக எதிர்ப்பது, சிறுபான்மையினருக்கான நிதி ஒடுக்கீட்டில் 80 சதவீதத்தை முஸ்லிம்களுக்கு மட்டுமே ஒதுக்குவது என பல்வேறு நாடகங்களை அறங்கேற்றி வருகிறது. லட்சத்தீவு மீதான அக்கறையும் அதில் ஒன்றுதான். அக்கட்சி லட்சத்தீவில் இல்லவே இல்லை என்பதும் ஒரு மாநிலம் மற்றொரு மாநிலம் அல்லது யூனியன் பிரதேச விஷயத்தில் தலையிடுவது முறையல்ல என்பதும் குறிப்பிடத்தக்கது. லட்சத்தீவில் 93 சதவீதம் முஸ்லிம்கள் மட்டுமே உள்ளனர். லட்சத்தீவு பாரத அரசின் பதுகாப்பு விஷயத்தில் முக்கிய கேந்திரமாக உள்ள இடம். ஆனால் இங்கு, போதைப்பொருள் கடத்தல், ஆயுதக்கடத்தல் உள்ளிட்ட பல்வேறு முறைகேடுகள் அன்றாடம் நடைபெற்று வருகிறது. இது குறித்த அனைத்து விஷயங்கள் தெரிந்திருந்தும், காங்கிரஸ் தலைவர் ராகுல், தமிழகத்தை சேர்ந்த கம்யூனிஸ்ட்டுகள், கமலஹாசன், சீமான் உள்ளிட்ட பல கட்சித் தலைவர்களும் ஒருசேர லட்சத்தீவு பிரச்சனையில் குரல் கொடுத்து வருகின்றனர். இதன் பின்னணியில் என்னவெல்லாம் நடந்திருக்கும் என்பது மக்களால் ஊகிக்க முடியாததல்ல.



# கம்யூனிச குண்டர்களிடம் சிக்கிய பத்திரிகையாளர்



கேரளா, கண்ணூர் பகுதியை சேர்ந்த முன்னாள் பத்திரிகையாளர் வினீதா வேணுவும் காவல்துறையில் பணியாற்றும் அவரது கணவரும் கேரளாவை ஆளும் கம்யூனிஸ்ட் கட்சியின் குண்டர்களால் தொடர்ந்து குறி வைக்கப்படுகின்றனர். கடந்த பிப்ரவரி 2018ல் இளைஞர் காங்கிரஸ் தொண்டரான ஷோயிப் என்பவரை சி.பி.ஐ.எம் குண்டர்கள் குண்டு வீசியும் வெட்டியும் கொலை செய்தனர். இதனை வினிதா அம்பலப்படுத்தினார். மேலும், கேரளாவில் கொரோனா நோயாளிகள் குறித்த உண்மைத் தகவல்களையும் வெளியிட்டார். இவரது கணவரால்தான் அந்த தகவல்கள் வினிதாவுக்குக் கிடைத்தது என எண்ணிய சி.பி.ஐ.எம் குண்டர்கள் அப்போது முதல், அவர்கள் இருவரையும் சமூக ஊடகங்களிலும் அவர்களின் தேசாபிமானி பத்திரிகையிலும் கேவலமாக சித்தரிப்பது, பொய்யான தகவல்களை கூறுவது, அவதூறு பரப்புவது, கணவருக்கு அடிக்கடி இடமாற்றம் என அதிகார துஷ்பிரயோகம் செய்கின்றனர். தினமும் அவர்களால் நாங்கள் சித்ரவதையை அனுபவிக்கிறோம் என்று கூறும் வினிதா, 'நான் அந்த செய்தியை வெளியிடும் முன்பே இரண்டு மலையாள சேனல்கள் அது குறித்து செய்திகளை வெளியிட்டுள்ளன. ஆனால், என்னை அவர்கள் இதற்கு காரணம் ஆக்குகிறார்கள். நான் அவர்கள் ஹிட் லிஸ்ட்டில் உள்ளேன் என எனக்குத் தெரியும். அதனால், ஒரேயடியாக எங்கள் இருவரையும் கொன்றுவிடுங்கள் 'என சி.பி.ஐ.எம் குண்டர்களை கேட்டுக்கொண்டுள்ளார் முன்னாள் பத்திரிகையாளரான வினிதா.